★
REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2020 டிசம்பர் 23 புதன்கிழமை

# தினகரன்

THINAKARAN

වරු. 88 இல. 304 | December 23, Wednesday, 2020 | 20பக்கங்கள் | 30/-

## கொரோனா தொற்றாளர்கள் 38 ஆயிரத்தை அண்மித்துள்ளது

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை 37 ஆயிரத்து 891 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்றைய தினம் வைரஸ் தொற்று நோயாளிகள் 260 பேர் புதிதாக இனம் காணப்பட்டுள்ள நிலையில் நாட்டின் மொத்த வைரஸ் தொற்று நோயாளிகளின் எண்ணிக்கை 37 ஆயிரத்து 891 ஆக அதிகரித்துள்ளதாக

06



'விரு அபிமன்' கொவிட் 19 காப்பீட்டுக் கொள்கையின் இரண்டாம் கட்டத்தைத் அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வில் காப்பீட்டுக் கொள்கை அடங்கிய ஆவணத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுக்கு சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி நேற்று (22) ஜனாதிபதி செயலகத்தில் வைத்து கையளித்தபோது...

கொவிட் 19 தடுப்பு மருந்து;

# கொள்முதல், விநியோகித்தல்; இலங்கைக்கு ஐ.நா. உறுதி

### பிரதமருடனான சந்திப்பில் ஐ.நா பிரதிநிதிகள் தெரிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொரோனா வைரஸ் தடுப்பு மருந்துகளை பெற்றுக்கொள்ளுதல், விநியோகித்தல் மற்றும் நிர்வகித்தல் தொடர்பில் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக ஐக்கிய நாடுகள் சபை உறுதியளித்துள்ளது. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடனான நேற்றைய விசேட சந்திப்பின் போதே அதற்கான உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

06



முஸ்லிம்களின் சடலங்களை புதைக்கும் விவகாரம்

# மனிதாபிமான முறையில் மீளாய்வு செய்ய அறிவிப்பு

### நிபுணர் குழுவிற்கு பரிந்துரை; மாலைதீவுக்கு அனுப்பும் தீர்மானம் இல்லை

**ஷம்ஸ் பாஹிம்**



நிபுணர் குழுவின் ஆலோசனைகளுக்கு ஏற்பவே அரசு முடிவு

கொரோனாவினால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் சடலங்களை புதைப்பதற்கு அனுமதி கோரும் விடயத்தை மனிதாபிமான ரீதியில் சிந்தித்து மீளாய்வு செய்யுமாறு நிபுணர் குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக இணை அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் டொக்டர் ரமேஷ் பதிரண தெரிவித்தார். மாலைதீவிற்கு சடலங்களை அனுப்புவது தொடர்பில் எந்த வித உத்தியோகபூர்வ கோரிக்கையையும் அரசாங்கம் மேற்கொள்ளவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக மாநாடு நேற்று ஸூம் தொழில்நுட்பம் ஊடாக நடைபெற்றது.






...யலாளர்களுக்கு வருடாந்தம் வழங்கப்படும் "அசிதிசி" வெகுசன ஊடக புலமைப்பரிசில் வழங் ... நடைபெற்றது. வெகுசன ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல ஊடகவியலாளர் ஒருவ ...வதையும் அமைச்சின் செயலாளர் ஜகத் பி. விஜேவீர அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.



முகமாலை மற்றும் கிளாலி பகுதிகளில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகள் அகற்றும் இடங்களுக்கு நேற்று நேரில் சென்ற இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த அங்கு இடம்பெறுகின்ற மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பணியினை பார்வையிட்ட போது...
படம்: கிளிநொச்சி குறூப் நிருபர்

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் ஐந்து பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளார்.

இதனையடுத்து இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 181 ஆக அதிகரித்துள்ளது.

06

...க வைப்பதற்கு

## ...திகளுடன் ...ள் தயார்



கொவிட்19 தொற்று காரணமாக மரணிப்பதாக சந்தேகிக்கும் முஸ்லிம்களின் சடலங்களை தகனம் செய்வது தொடர்பில் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அறிக்கை கிடைக்கப்பெறும் வரையில் பாதுகாப்பாக வைப்பதற்காக குளிர்சாதன வசதிகள் அடங்கிய 05 கொள்கலன்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

06

## சுதந்திரக் கட்சியுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை

### குற்றச்சாட்டுகள் தொடர்பாக ஆராய்வு

**ஷம்ஸ் பாஹிம்**



தங்களை புறக்கணிப்பதாகவும் அரசிலிருந்து ஒதுங்கப் போவதாகவும் சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ள நிலையில் சுதந்திரக்கட்சி முன்வைத்துள்ள குறைபாடுகள் தொடர்பில் சுதந்திரக் கட்சியுடன் அரசாங்கம் பேச்சு நடத்தி வருவதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார். தங்களை புறக்கணிப்பதாகவும் அரசிலிருந்து ஒதுங்கப் போவதாகவும் சுதந்திரக் கட்சி

06

பலாலி விமான நிலையத்திற்கு

## தந்தை செல்வாவின் பெயர் சூட்டுமாறு வீ.ஆனந்த சங்கரி கோரிக்கை

**கிளிநொச்சி குறூப் நிருபர்**



யாழ்ப்பாணம், பலாலி விமான நிலையத்துக்கு தந்தை செல்வாவின் பெயரைச் சூட்டு ... கோட்டாபய ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

## கண்ணிவெடி அகற்றும் பணி 2022 இல் முழுமையாக நிறைவு

### இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த

**பரந்தன் குறூப் நிருபர்**



2009ம் ஆண்டு யுத்தம் நிறைவுற்ற பின்னர் மேற்கொள்ளப்பட்ட கண்ணிவெடி அகற்றும் பணிகள் இன்றும் தொடர்கின்றன. 2021 மற்றும் 2022ம் ஆண்டு காலப் பகுதிக்குள் முழுமையாக கண்ணிவெடிகளை அகற்றி முடிக்கலாம் என இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த தெரி

கடற்றொழில், நீரியல்வள

## சட்டத்தை திருத்தம் செய்ய அமைச்சரவை அனுமதி



1996 ஆம் ஆண்டின் கடற்றொழில் மற்றும் நீரியல்வளத்துறை சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன் வைத்த ஆலோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

1996 ஆம் ஆண்டு 02 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்

**விக்கல் வீராச்சாமி**



அண்ணே, நம்ம கமல் ஐயா, வீட்டில வேலை இல்லாம இருக்கும் பெண்களுக்கு அரசு ஊதியம் வழங்க போகிறாராம்.....
உந்த அறிக்கையை பாத்துட்டு நாங்களும் இந்தியாவில பிறந்திருக்கலாம்